## வெலிக்கந்த பிரதேச சபை - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வெலிக்கந்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட 0000000வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுக்கப்பட்ட அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகிறது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு )

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டில் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் சபைக் வழங்கப்பட்டிருந்த ரூபா 171,607 ஆன 155 கெலவனஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதென. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு எஞ்சிய இருப்பு பெறுமதி ரூபா 217,089 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிகைக மேற்கொள்வதென. | எஞ்சிய இருப்பை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் திம்புள்ளாகல பிரதேச சபையிடமிருந்து கிடைத்திருந்த நிகழ்கால சந்தைப் பெறுமதி ரூபா 1,793,300 ஆன நீர் குழாய உபகரண இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உபகரண இருப்பின் பெறுமதி வழங்கப்படாத காரணத்தால் புத்தகளிற்கு உட்படுத்த இயலாதுள்ளதாக. | அனைத்து சொத்துக்களினதும் பெறுமானத்தை கணக்கீடு செய்ய வேண்டும. |
| (ஈ) | பிபிதெமு பொலொன்னருவ மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆண்டின் போது ரூபா 2,000,000 யினை செலவிட்டு அபிவிருத்தி | மறுசீரமைப்பில் பிரச்சினை காணப்படுவதால் சட்டரீதியாக சபைக்கு பெற்றுக்கொள்ளாததனால் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்து சபையிடம் வழங்கியிருந்த பிரதேச சபையின் சுற்றுலா விடுதியாக பயன்படுத்தும் கட்டிடம் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டு இல்லையென. | |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கீடு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஜர்னல் குறிப்பு ஊடாக சரி செய்ய நடவடிக்கை எடுத்தள்ளதாக | கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கீடு மேற்கொள்ள வேண்டும. |
| (ஊ) | சபையின் வருமான பரிசோதகரால் மீளாய்வாண்டினுள் களத்தில் செர்க்கப்பட்டு சபை நிதியத்திற்கு செலவு வைத்தில்லையென இனங்காணப்பட்ட ரூபா 1,984,605 ஆன தொகை மற்றும் அதன் காரணத்தால் வருமான விடயத்திற்குான தாக்கத்தினை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிரக்கவில்லை. | குறித்த பற்றுச்சீட்டுகள் கணக்காய்வினால் கோரியுள்ள போதும், மீண்டும் கிடைக்காததனால் அத் தொகையை வெளிப்படுத்திற்கொள்ள முடியாமல் போனது என. | தின வருமானம் அத்தினத்திலே இனங்கானுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2018 ஆண்டின் போது பிரதேச சபையிடம் கிடைத்திருந்த 13 மடிக்கணனி இயந்திரங்கள் டெக்ஸ்டொப் இயந்திரம் ஒன்றும் மற்றும் 02 பிரிண்டர் பெறுமதியை இனங்கண்டு நிதி கூட்டுகளில் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | பெறுமதியுடன் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்காததனால் கணக்கீடு செய்யவில்லையென. | சொத்துக்களின் பெருமதியை நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரை கட்டணம் ரூபா 3,103,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஜர்னல் குறிப்பு ஊடாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது என. | ஆண்டின் வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 220,805,047 ஆன 05 கணக்கு மீதிகளின் மீதி உறுதிப்படுத்தல்கள், அட்டவணைகள் மற்றும் இணக்கம் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காததனால் திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | அனைத்து பதிவேடுகளையும் சமர்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என. | அட்டவணைகள் மற்றும் இணக்கம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு | | | |
| XXVIII அத்தியாயத்தின் 31 ஆவது பிரவு | 2021 ஆண்டின் உடன்பட்ட தொகையிலிருந்து 50 சதவீதம் விதம் குறைத்து 2022 ஆண்டிற்காக டென்டரை வழங்குவதற்கான தகைமை உள்ளது என 2022 சனவரி 18 ஆம் திகதி இடம்பெற்ற பொது சபையின் 5.2.13 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உத்தேசம் ஒன்றாக் குறிப்பிட்டு போலியான ஆவணங்களை தயாரித்து உள்ளதாக அவதானிக்கப்பட்டன | சபை நிதியத்திற்கு அறவிட வேண்டிய வருமானம் ஒன்றை இழக்கப்பட்டு இல்லையென. | சபையின் அங்கீகாரிக்கப்படாத விடயம் ஒன்று பின்னர் அங்கீகரிக்கப்பட்ட விடயம் ஒன்றாக ஆவணங்கள் தயாரித்துள்ளது என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தும் சான்றுகளை கிடைத்துள்ளதால் அது தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 6,647,841 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,894,878 ஆக இருந்தது.

**2.2 நிதிசார் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு முழுவதும் சபை நிதியத்தின் மீதி ரூபா 27 மில்லியனிற்கும் ரூபா 57 மிலியனற்கும் இடையில் காணப்பட்டதுடன், மேலதிக நிதிப் பங்கொன்று மக்கள் வங்கியின் சாதாரண சேமிப்பு கணக்தொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு முழுவதும் காணப்பட்ட நிலையான வைப்பு உயர்ந்த வட்டி | ஏற்றுக்கொள்ளப்பட்டஎள்ளது. | மேலதிக தொகையை (குறுகியகாலமாக) முதலீடு மீது கவனம் செலுத்த வேண்டும். |

விகிதத்தின் மீது மேலதிக நிதியை குறுகிய காலப் பகுதிகளாக ஏனும் முதலீடு செய்வதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 787,400 | 389,400 | 389,400 | - | 1,253,800 | 556,410 | 556,410 | - |
| (ii) | வாடகை | 8,558,916 | 4,284,700 | 2,534,125 | 5,478,753 | 6,441,547 | 7,987,528 | 4,273,800 | 3,713,728 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 488,650 | 189,282 | 189,281 | 774,845 | 697,650 | 157,035 | 157,035 | 774,645 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,544,000 | 11,074,183 | 9,300,000 | 12,035,401 | 18,120,000 | 32,848,155 | 25,510,004 | 7,338,151 |
| | | 18,378,966 | 15,937,565 | 12,412,806 | 18,288,999 | 26,512,997 | 41,549,128 | 30,497,249 | 11,826,524 |

**2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட குப்பை வரி வருமானம் ரூபா 438,000 மற்றும் ஆரம்ப நிலுவை ரூபா 311,300 இனால் ஆண்டின் போது சேர்க்கப்பட்டிருந்த ரூபா 55,150 ஆனது. | பணத்தை அறவிட தேவையான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என. | குப்பை சேகரிப்பது பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட கடையறை வருமானம் ரூபா 2,331,600 மற்றும் ஆரம்ப நிலுவை ரூபா 2,696,897 ஆக சேர்ப்பதற்கு எதிர்பாத்திருந்த ரூபா 5,028,497 வருமானத்திளிலிருந்து மீளாய்வாண்டின் போது சேர்க்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 544,700 ஆனது. | தற்பொது நிலுவை வருமானத்திளிலிருந்து பகுதியொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டள்ளதாக. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2022 சனவரி 01 திகதிக்கு 08 மாதங்கள் முதல் 70 வரையான 33 கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை கடையறை வாடகை | நிலவிய நிலைமை மீது பணம் சேர்ப்பதற்கு வருமான பரிசோதகரிக்கு முடியாமல் போனது என. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| ரூபா 2,028,261 ஆனதடன், அது தொடர்பாக ஒபப்ந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) பல வருடங்களாக நிலவி வரும் ரூபா 1,016,831 ஆன சொத்துக்களை குத்தகைக்கு வழங்கிய (டெண்டர்) நிலுவை வருமானத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இப்போது ஒழுங்காக அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளது என. | வருமான கட்டுப்பாட்டாலர் சேகரிக்கும் வருமானத்தை சபைக்கு அறவிடவும், எஞ்சிய நிலுவை வருமானம் அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) அனுமதிபபத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| மிளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 774,645 ஆன நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டண வருமானம் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய வருமான பரிசோதகரினால் புலனாய்வு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது என. | நிலுவை வருமானத்தை தீர்துக்கொள்ள வேண்டும் |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனை சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) உப விதி** | | |
| பிரதேசிய சபை சட்டத்தின் 126 பிரிவின கீழ் உப விதி விதிக்க வேண்டிய குடி நீர் விற்பனை, கட்டிடங்கள் நிர்மாணித்தல், பாதைகள் மற்றும் வீதிகள், குப்பை அகற்றுதல், களியாட்ட வாடகை, மண் போக்குவரத்து போன்ற பிரதான 06 கடமைகள் தொடர்பாக உப விதி விதிக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சமர்ப்பிக்கப்ட்டு அங்கீகாரத்திற்காக அனுப்பியுள்ளது என. | உப விதி விதிக்கப்பட வேண்டும். |
| **(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்** | | |
| (i) வெலிகந்த பிரதேச சபையினால் சபை அதிகார எல்லையில் தினந்தோரும் ஒன்றுசேரும் குப்பைகளை முகாமை செய்வதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்றை செயற்படத்தி இருக்கததுடன், வகைப்படுத்தாது | உத்தேச தாமரை வாவி திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்தவ மத்திய நிலையத்தில் செயற்பாடுகளை தற்போது ஆரம்பித்துள்ளதால் அதற்கு ஒத்ததாக எதிர்காலத்தில் முறையான தின்மக்கழிவு | முறையான திண்மக் கழிவு முகாமைத்துவமொன்று மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்படும் குப்கைகள் சேனபுற பிரிவிற்கு சொந்தமான எதுகல 05 ஏக்கர் அளவான திறந்த நிலத்திற்கு கொட்டி மூடப்படுதல் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு வந்தது. | திட்டமொன்றை செயற்படுத்த திட்டமிட்டுள்ளது என. | |
| (ii) | சபையினால் 2021 ஆண்டில் தாமரை வாவி பிரதேசத்தில் ரூபா 1,236,921 செலவிட்டு உக்கலடையாத குப்பைகளை திரட்டும் களஞ்சியம் ஒன்றை நிர்மாணித்திருந்த போதும் உக்கலடையாத குப்பைகளை களஞ்சிப்படுத்த நடவடிக்கை எடுக்காது அக் கட்டிடத்தை மீளாய்வாண்டு முழுவதும் செற்பாடடின்றி காணப்பட்டது. | உத்தேச தாமரை வாவி திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்தவ கருத்திட்டத்தின் ஊடாக எதிர்காலத்தில் உக்கலடையாதக குப்பைகள் தொட்டிலை செயற்படுத்த நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளது என. | சொத்துக்களை நிலைப்படுத்தும் போது சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டும். |

**3.2 முகாமைத்தவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,412,901 ஆன கடன்கொடுனர் 09 மீதிகள் 2011-2018 இடையிலான காலம் முதல் தீர்க்கப்படாது நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படுகிறது. | எதிர்காலத்தில் இந்த மீதி சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுவது என. | கடன்கொடுனர்களை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டின் போது பிரதேச சபையிற்கு முன்னைய இராஜாங்க அமைச்சர் ஒருவரிடமிருந்து கிடைத்திருந்த 12 லெப்டொப் வகையின் கணனி உம், டெக்ஸ்டொப் வகை கணனியொன்று மற்றும் கணனி பிரின்டர் 02 உம் கணக்காய்வு திகதியான 2023 பெப்ரவரி 23 திகதியளவிலும் விளைவற்று காணப்பட்டன. | வளவாலர் ஒருவரை ஆட்சேர்க்க முடியாமல் போனதால் கணனி கல்வியறிவை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்க முடியாமல் போனதாக அறிவிக்கப்ட்டுள்ளது. | சொத்தக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செவனபிட்டிய பலநோக்கு கட்டிடத்தை நூலகமொன்றாக நவினமயமாக்கி, அதனுள் இலத்திரன் படிப்பு மத்தியநிலையம் ஒன்றை உருவாக்க சபையினால் பல மூலங்களிலிருந்து 2021 ஆண்டின் போது ரூபா 2,856,456 ஆன நிதியத்தை சேகரித்திருந்த | ஏற்றுக்கொள்ளப்பட்டள்ளது . | குறித்த நோக்கத்தை அடைந்தக்கொள்ள வேண்டும். |

பொதும், 2022 திசெம்பர் 12 திகதி வரையும் குறித்த நோக்கத்தை அடைந்திருக்கவில்லை.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை** | | |
| 2022 திசெம்பர் 31 திகதிக்கு பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 40 ஆவதுடன், நிரந்தர ஆளணியின் 29 பேர்கள் மற்றும் அமய ஊழியர் 09 பேர்களும் ஊடாக கடமை மேவுகை செய்திருந்தது. நிரந்தர ஆளணியின் 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. | மேல் முகாமைத்தவத்தினால் கோரிக்கை செய்துள்ள பொதும் இதுவரை அதற்காக செயற்பாடொன்று எடுத்திருக்கவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினர்களின் கவனத்திற்கு அனுப்ப வேண்டும். |